மரபணு, இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களின் செல் கருவிற்குள் அமைந்திருக்கும் மூலக்கூறாகும். ஓர் உயிரினத்தின் மரபணுவை மாற்றம் செய்தோ, அல்லது சிதைத்து உருவாக்கினாலோ அல்லது வேறு ஒரு உயிரினத்தின் மரபணுவை வெட்டி ஒட்டியோ, புதிய ஒரு உயிரினத்தை உருவாக்குவதுதான் இந்த மரபணு மாற்றுத் தொழில்நுட்பம். இது முக்கியமாக நாம் பயிர் செய்யும் தாவரங்களில் செய்யப்பட்டு வருகிறது. இதனை ஆங்கிலத்தில் Genetic Modification (GM) என் பர்.




மரபணு மாற்று உணவை உண்டால் உடல் உறுப்புகள் வளர்ச்சி பாதிப்பு, திசுக்கள் பாதிப்பு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு, ஒவ்வாமைப் பிரச்சிசினைகள், சிறுநீரகம் மற்றும் கல்லீரல்களில் நச்சுத்தன் மை போன் ற உடல்நல பாதிப்புகள் உண்டாவதாக ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. மேலும், சமீபத்திய ஆய்வுகளில் கருவுறுவதிலும் மகப்பேற்றிலும் தீவிர பாதிப்பு உண்டாகும் என் று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மரபணு மாற்று விதைகள் மண்வளத்தை பாதிக்கும். நமது பாரம்பரிய விதைகள் அனைத்தும் பன் னாட்டு கம்பெனிகளின் உரிமையாக மாற வழிவகுக்கும். இவை இயற்கையான சுற்றுச்சூழலில் மரபணு மாசை உருவாக்கி, நாம் பல ஆயிரம் ஆண்டுகளாக உருவாக்கிய பாரம்பரிய விதைகளுக்கும் உயிரியல் பன் மைக்கும் பாதிப்பினை உண்டாக்கும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல் நியாயமா?**

நமது வரிப்பணத்தில் இயங்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மறைந்து வரும் நமது பாரம்பரிய வேளாண் சொத்துகளை பாதுகாக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல், மான் சாண்டோ போன் ற நிறுவனங்கள் தரும் பணத்திற்காக மரபணு மாற்றுப் பயிர் ரகங்களை பகிரங்கமாகவும், ரகசியமாகவும் ஆய்வு செய்து வருகின் றன. குறிப்பாக, இங்கு பி.டி. மக்காச்சோளம் மான் சாண்டோவிற்காக இலவசமாக பயிரிடப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

எந்த முன் னெச்சரிக்கையுமின் றி, தகுந்த ஆதாரமுமின் றி, பலதரப்பட்ட மக்களிடமிருந்து (விவசாயிகள், பாமர மக்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள்) வரும் பலத்த எதிர்ப்புக்கு இடையே இந்திய அரசு, மரபணு மாற்று பி.டி. கத்திரிக்காயை இன் னும் சில வாரங்களில் அறிமுகப்படுத்தவிருக்கிறது. இதைத் தொடர்ந்து அனைத்துக் காய்கறிகளிலும், உணவு தானியங்களிலும், மூலிகை வளங்களிலும், மரங்களிலும் மரபணு மாற்றுப் பயிர்களை அறிமுகம் செய்ய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தீவிரமாக முயற்சி செய்து வருகிறது.

**இந்தியாவில் மரபணு மாற்றுப் பருத்தியால் ஏற்படுட்ட பாதிப்பு?**

இந்தியாவில் மரபணு மாற்றுப் பருத்தி (பி.டி.பருத்தி) கடந்த 6 ஆண்டுகளாகப் பயிரிடப்பட்டு வருகிறது. தற்காலிகமாக ஓரிரு சாகுபடிகளுக்கு இது பூச்சிகளைக் குறைப்பது போலத் தெரிந்தாலும், பிறகு நாம் கண்கூடாகக் கண்ட விளைவுகள் மிகப் பயங்கரமானவை !

- பி.டி. பருத்தி அதிகம் விளைவித்த ஆந்திரா, மஹாராஷ்டிர மாநில விவசாயிகள் லட்சக்கணக்கில் நஷ்டத்தில் தள்ளப்பட்டு, ஆயிரக்கணக்கில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.
- தமிழ்நாட்டில், 2007ம் ஆண்டு பி.டி. பருத்தி பயிரிட்டதால் தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டதைத் தொடர்ந்து 5000 ஏக்கருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.
- ஆந்திராவிலும் மத்தியப் பிரதேத்சிலும் பி.டி. பருத்தித் தழைகளை உண்ட கால்நடைகள் ஆயிரக்கணக்கில் இறந்துள்ளன. பல இடங்களில் மனிதர்களுக்கு தோல் அரிப்புகளும் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவித் துள்ளனர்.
- இன் று சந்தையில் பி.டி. பருத்தியை விட்டால் வேறு விதையே கிடைக்காத ஒரு அடிமை நிலைக்கு பருத்தி விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் !

**மரபணு மாற்றுப் பயிர்களுக்கு மாற்று இல்லையா?**

இன்று இயற்கை வேளாண்மை நாம் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. விவசாயி, மாட்டுச் சாணம், வெல்லம், தயிர், இளநீர் போன்று எளிதில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தானே உருவாக்கும் அமிர்தகரைசலும் பஞ்சகவ்யமும், மூக்கில் விரலை வைக்கும் அளவுக்கு விளைச்சலை அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஒற்றை நாற்று (S.R.I.) முறையில் நெல் பயிர் செய்து, குறைந்த செலவில் நெல் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் முறையை நம் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு பிரபலப்படுத்தி வருகிறது. பண்ணையிலேயே எளிதாகக் கிடைக்கும் தாவரங்களைக் கொண்டும், மாட்டு மூத்திரத்தைக் கொண்டும் அட்டகாசமான பூச்சி விரட்டிகளை நம் விவசாயிகளே நஞ்சின்றி, செலவின்றி தயார் செய்து பயன் பெற்று வருகின்றனர்.

**உணவிலும் வரப்போகும் மரபணு மாற்றுப் பயிர்கள்.!**

பருத்தியில் மட்டுமே இத்தனை பிரச்சனைகள் இருக்க, இதுபோன்று மரபணு மாற்றுப் பயிர்கள் இப்போது அரிசி, கோதுமை, பருப்பு, காய்கறிகள், பழங்கள், மூலிகைகள், மரங்கள் என அனைத்து வகைத் தாவரங்களிலும் வர இருக்கிறது. மரபணு மாற்றுப் பயிர்களுக்கும் இயற்கைப் பயிர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை மக்களால் எளிதில் அடையாளம் காண முடியாது.

உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் மரபணுத் தொழில்நுட்பத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தவண்ணம் உள்ளனர். இதுவரையில் மரபணு மாற்றுப் பயிர்கள் அமரிக்கா, கனடா, அர்ஜென்டினா மற்றும் பிரேசில் ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே பெருமளவில் உள்ளன. 11 ஐரோப்பிய நாடுகளிலும் 180 பிற நாடுகளிலும் இவைகள் அனுமதிக்கப்படவில்லை. அமெரிக்காவிலும் கூட, சில உள்ளூர் அரசாங்கங்களும், இந்தியாவில் கேரள மாநில அரசாங்கமும் மரபணு மாற்றுப் பயிருக்குத் தடை விதித்துள்ளன.

**எனவே மண்ணையும், மக்களையும் மலடாக்கும் நாச சக்தியான மரபணு மாற்றுப் பயிர்களை எதிர்த்துப் போராட நாம் அனைவரும் ஓரணியில் திரளுவோம் !**

நமது கோரிக்கைகள்:

1. மரபணு மாற்றுப் பயிர்களும், அவற்றின் கள ஆய்வுகளும் உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டும். அரசின் வேளாண் பல்கலைக்கழகங்கள், தனியாருடன் இணைந்து மரபணு மாற்று சோதனை செய்வதைக் கைவிட வேண்டும்.
2. மரபணு மாற்றுப் பொருட்களின் நேரடி மற்றும் மறைமுக இறக்குமதி தடை செய்யப்பட வேண்டும். திருட்டுத்தனமாக வரும் இறக்குமதிகளைத் தடுத்து கடும் தண்டனை விதிக்க வேண்டும்.

---

மேலும் விபரங்களுக்கு

**பாதுகாப்பான உணவுக் கூட்டமைப்பு**

www.safefoodalliance.blogspot.com